O.S. No.9/2024

09.03.2026

**வா.சா.1**

**திருமதி ஜெயந்தி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எந்த சர்வே நம்பருக்கு என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் குடவாசலில் உள்ள இரும்பு கடையை என் அப்பா எனக்கு உயில் மூலமாக எழுதி வைத்துள்ளார். அந்த இடத்தில் சர்வே நம்பர் எனக்கு ஞாபகமில்லை. அந்த இடத்தை என் அப்பா என் சித்தப்பாவிடமிருந்து 2002 ல் கிரயம் பெற்றார். எனக்கு 1990 ல் திருமணமானது. என் கணவர் வீடு கும்பகோணத்திற்க அருகில் உள்ள இன்னம்பூரில் உள்ளது. நான் திருமணமானதிலிருந்து அங்குதான் வசித்து வருகிறேன். தேதி ஞாபகமில்லை, 8 ம் மாதம் 2022 ல் என் அப்பா உயில் எழுதி வைத்தார். உயில் எழுதிய விபரம் தெரியும், அதில் சாட்சியாக இருவர் கையெழுத்து போட்டார்கள், ஒருவர் லோடு மேன் கார்த்தி மற்றொருவர் பெயர் ஞாபகமில்லை. உயிலில் உயில் சொத்தானது சுயமாக சம்பாதித்ததாக உயிலில் என்னுடைய அப்பா எழுதியுள்ளார். அந்த இடத்தின் விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லை எனக்கு ஞாபகமில்லை. அந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.09 15:44:27 +0530

இரும்பு கடை ஒரே சர்வே நம்பரில் உள்ளது. அந்த இரும்பு கடையை என் தம்பி செந்தில்குமார் நடத்தி வருகிறார். அந்த இரும்பு கடையில் Nippon Paint மற்றும் மற்ற பொருட்களும் கலந்திருக்கிறது. நான் தாவா சொத்திற்கு வரி எதுவும் செலுத்தவில்லை. எந்தெந்த கம்பெனியிலிருந்து பொருட்கள் வாங்குகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. கடையை தவிர பக்கத்தில் உள்ள இடத்தில் சிமெண்ட் அடுக்கி வைத்திருக்கிறார்கள். கொல்லையில் உள்ள இடம் காலியாக உள்ளது. என் அப்பா இறப்பதற்கு முன்புவரை நன்றாகத்தான் இருந்தார்கள். என் அப்பாவிற்கு வாத நோய் எதுவும் வரவில்லை. எனக்கு திருமணமானபின்பு நான் அடிக்கடி வந்து என் அப்பாவை பார்த்து நல்லது கெட்டது செய்து விட்டு செல்வேன். 2011 ல் என் தகப்பனாருக்கு வாத நோய் வந்தது என்றால் இல்லை. 2011 ல் என் தகப்பனாருக்கு வாத நோய் வந்து அது முதல் என் அப்பா படுத்த படுக்கையாகி இருந்தார் என்றால் இல்லை. என் அப்பாவிற்கு சிகிச்சை அளித்ததாக சொல்லுவதற்கு ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எந்தெந்த தேதியில் அரசவனங்காடு வந்து என் அப்பாவை பார்த்து சென்றேன் என்று வழக்குரையில் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரி. 2011 லிருந்து என் அப்பாவிற்கு வாத நோய் வந்ததிலிருந்து என் அப்பா வெளியில் சென்றதில்லை எனவும் 07.08.2022 ல் என் அப்பா உயில் எழுதி வைப்பதற்காக வாய்ப்பு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.09 15:44:36 +0530

இல்லையெனவும் சொன்னால் தவறு. என் தாயார் பெயர் வேம்பு, அவரது பூர்வீகம் திப்பிராஜபுரம் ஆகும். திப்பிராஜபுரம் கிராமத்தில் என் தாயாருக்கு சொத்து இருந்தது. நான் திருமணமாகி என் கணவர் வீட்டிற்கு சென்றபின் திப்பிராஜபுரத்தில் உள்ள சொத்தை என் பெயருக்கு எடுத்துக்கொண்டு அரசவனங்காடு சொத்தில் எதுவும் எனக்கு தேவையில்லை என சென்றுவிட்டேன் என்றால் தவறு. அதனால்தான் விஸ்தீரணம் சர்வே எண் எனக்கு தெரியவில்லை என சொல்கிறேன் என்றால் தவறு. வழக்குரையில் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ளேன். ஆனால், அனுபவத்தை நிரூபிக்க கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. என் அப்பா உயில் எழுதிய விபரத்தை என்னிடம் என் அப்பாதான் சொன்னார். 8 ம் மாதம் சொன்னார், தேதி ஞாபகமில்லை. அன்றைய தினம் என் அப்பா உயிலை என்னிடம் ஒப்படைத்துவிட்டார். அப்போது என் அப்பா அரசவனங்காட்டில் இருந்தார், என்னுடைய சகோதரர்கள் அங்கு இருந்தார்கள். அரசவனங்காட்டில் உள்ள வீட்டில் வைத்து என் அப்பா உயிலை என்னிடம் ஒப்படைத்தார் என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் தவறு. நான் திருமணமாகி என் கணவர் வீட்டிற்கு சென்றபின் அரசவனங்காட்டிற்கு வரவில்லை எனவும் உயிலானது போர்ஜரியாக ஏற்படுத்தப்பட்டது எனவும் சொன்னால் தவறு. இரும்பு கடை செந்தில்குமார் அனுபவத்தில் உள்ளது எனவும் கூட்டனுபவத்தில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.09 15:44:43 +0530

இல்லையெனவும் அதனால் நான் கோரியுள்ள வசப் பரிகாரம் கிடைக்க கூடியதல்ல எனவும் சொன்னால் தவறு. உயில் என ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தால் நான் விளம்புகை பரிகாரம் கேட்டிருக்க மாட்டேன் எனவும் பொய்யை உண்மையென நிரூபிப்பதற்காக விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் எனவும் சொன்னால் தவறு. 2023 ல் என்னுடைய உரிமையை பிரதிவாதிகள் மறுத்தார்கள் என தெரிவித்துள்ள நிலையில் நான் அன்றைய தினம் கிராமத்திற்கு வரவில்லை எனவும் என்னுடைய சகோதரர்களை சந்திக்கவில்லை எனவும் சொன்னால் தவறு. வழக்கு மூலம் இல்லாமல் வழக்குரை தாக்கல் செய்துள்ளதால் நான் கேட்டுள்ள வசப் பரிகாரம் கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.09 15:44:48 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.